<u>பத்திரிக்கை செய்தி</u>

**நாமக்கல் மாவட்டத்தில் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்ட முகாம் 22.08.2019-ந் தேதியிலிருந்து துவக்கம்**

-----------

பொதுமக்களின் குறைகள் விரைந்து தீர்வு காணும் பொருட்டு தமிழக அரசால் **<u>“முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்டம்”</u>** அறிமுகப்படுத்துப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சா் அவா்கள் 19.08.2019-ந் தேதியன்று துவக்கிவைத்துள்ளார்கள் இதனை தொடர்ந்து நாமக்கல் மாவட்டத்திலும் இத்திட்டம் 22.08.2019-ந் தேதியிலிருந்து துவக்கிவைக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின்படி நாமக்கல் மாவட்டத்தில் நகரங்களில் வார்டுகளிலும், கிராமங்கள் தோறும் நேரடியாக சென்று பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெறுவதற்கு வருவாய் துறை, ஊரக வளர்ச்சி துறை / நகர்புற வளர்ச்சி துறை மற்றும் பிற துறைகள் அடங்கிய அலுவலா்களை கொண்டு குழு மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்களால் நாமக்கல் வட்டத்தில் 5 குழுக்களும், சேந்தமங்கலம் வட்டத்தில் -4 குழுக்களும், கொல்லிமலை வட்டத்தில்-1 குழுவும், மோகனூர் வட்டத்தில் 4 குழுக்களும், இராசிபுரம் வட்டத்தில் 6 குழுக்களும், பரமத்தி-வேலூா் வட்டத்தில் 4 குழுக்களும், குமாரபாளையம் வட்டத்தில் 4 குழுக்களும், திருச்செங்கோடு வட்டத்தில் 7 குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளது.

மனுக்கள் பெறப்படும் இடம் மற்றும் நேரம் குறித்து ஒலிபெருக்கி, துண்டு பிரசுரம், தண்டூரா மற்றும் செய்திதாளின் வழியாக பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படும். மக்களின் அடிப்படைத் தேவைகளான சாலைகள், தெரு விளக்குகள், மருத்துவம் சுகாதாரம் மற்றும் குடிநீா் வழங்கல் போன்ற அடிப்படை தேவைகளுக்கு இத்திட்டத்தில் தீா்வு காணப்படும். பொதுமக்கள் இத்திட்டத்தில் தங்கள் குறைகள் தொடா்பான மனுக்களை அளித்து பயன்பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**ஓம்/-மு.ஆசியா மரியம் இ.ஆ.ப,**<br>**மாவட்ட ஆட்சித்தலைவா்,**<br>**நாமக்கல் மாவட்டம்.**